Reg. No.: | | | | | | |

# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 1

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரை: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

(ii) விடை கள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் 15)

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15

1. "மெத்த வணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பலகளும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. "பூங்காற்றே! இத்தனை நாள் உனைப் பாடாதிருந்து விட்டேன்" என்று வருந்திய கவிஞர்
அ) தனிநாயக அடிகள் ஆ) தேவகோட்டை வா. மூர்த்தி
இ) இளங்குமரனார் ஈ) பாரதியார்

3. மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு ஆகிய சொற்களில் இடம்பெறும் பொதுப்பெயர்கள் எவை?
அ) மார்கழி, சாரை ஆ) மார்கழி, பாம்பு இ) திங்கள், பாம்பு ஈ) திங்கள், சாரை

4. மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்ட நூல்?
அ) 483 ஆ) 543 இ) 583 ஈ) 643

5. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) இலக்கியம் இ) அறிவியல் ஈ) கல்வி

6. சா. கந்தசாமி எந்த குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றுள்ளார்?
அ) தொலைந்து போனவர்கள் ஆ) தூய வம்சம்
இ) சாந்தகுமாரி ஈ) சுடுமண் சிலைகள்

7. அகவற்பாவுடன் தொடர்பில்லாத ஒன்று
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) பெருங்கதை ஈ) நாலடியார்

8. தேம்பா + அணி என்பதன் பொருள்
அ) வாடாதமாலை ஆ) சூடாத மாலை இ) பாடாத மாலை ஈ) தேன் மாலை

9. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்சேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

10. செவ்வழிப்பண், பஞ்சுரப்பண் முதலியனவற்றுக்குரிய திணைகள் முறையே
அ) நெய்தல், பாலை ஆ) குறிஞ்சி, முல்லை
இ) மருதம், நெய்தல் ஈ) மருதம், பாலை

11. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்



பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒருசொல் அன்றோ?
"ஏழைமை வேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ?

12. "ஏழைமை வேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ? / இக்கூற்றுக்கு உரியவர் யார்?
அ) கம்பன் ஆ) வேடன் இ) இராமன் ஈ) அனுமன்

13. நெடுந்திரை - இலக்கணக்குறிப்பு.
அ) வினைத்தொகை ஆ) எண்ணும்மை இ) தொழிற்பெயர் ஈ) பண்புத்தொகை

14. இப்பாடலில் அமைந்துள்ள சீர்மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) தோழமை, ஏழைமை ஆ) ஏழைமை, ஏசாரோ
இ) ஆழ, வேழ ஈ) நெடுந்திரை, நெடும்

15. இப்பாடலை இயற்றிய ஆசிரியர் யார்?
அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள்
இ) நப்பூதனார் ஈ) பாரதியார்

### பகுதி - II (மதிப்பெண்கள் 18)

#### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) இதழியலில் செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது.
ஆ) மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.

17. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" - தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

19. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் யாவை?

20. தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

21. 'உலகு' என முடியும் திருக்குறளை எழுதுக.

#### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5x2=10

22. பழமொழிகளை நிறைவு செய்க:
அ) பொறுத்தார் ............................ .
ஆ) தோலவியே ............................ .

23. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க:
அ) பசுமையான .................... ஐக் ........................ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) காட்டு விலங்குகளைச் ........................ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ........................ திருத்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

24. கீழ்க்காணும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர்.
ஆ) முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

25. தொடரை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
அ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக).
ஆ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக).

26. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.
அ) மறக்க நினைக்கிறேன் ஆ) வரப் போகிறேன்

27. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
அ) மலரும்மணமும்போல ஆ) கிணற்றுத்தவளைபோல்

28. தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2x3=6

29. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

30. கொடையின் சிறப்பை இலக்கியங்கள் போற்றுவது பற்றி எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வர வேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம்.

1) உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தவர்கள் யார்?
2) வாழை இலையின் குறுகலான பகுதி உண்பவரின் எப்பக்கத்தில் இருக்க வேண்டும்?
3) நாம் எவ்வாறு உணவு உண்ணும் பழக்கம் உடையவர்கள்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2x3=6

32. கண்ணோட்டம் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

33. பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக:
"புண்ணியப் புலவீர்" ... எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்.
(அல்லது)
"விருந்தினனாக ஒருவன்" ... எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2x3=6

35. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.

36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. உவமையணியை எடுத்துக்காட்டுடன் விள்க்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
(அல்லது)
ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியைத் தொகுத்து எழுதுக.

39. அ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.
(அல்லது)
ஆ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு வென்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. ஒருபக்க அளவில் உரையாடல் எழுதுக.
சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகனுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

42. அ) குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.
குறிப்பு : எதிர்மறையான சொற்கள்

| | |
|---|---|
| மீளாத்துயர் | |
| கொடுத்துச் சிவந்த | |
| மறைத்துக்காட்டு | |
| அருகில் அமர்க | |

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.
The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in [illegible]. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V (மதிப்பெண்கள் 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x8=24

43. அ)-உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.
(அல்லது)
ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) அறிவியலார் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.
(அல்லது)
ஆ) அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கின்றான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.
(அல்லது)
ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிற துறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

ஜஜஜ